**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1088/2022**

**Deposition of PW-2**

| **Name** | : | திரு. மைக்கேல் | **Age** | : | 63/2026 |
|---|---|---|---|---|---|
| **Father's Name** | : | திரு. சலேத்து | **Religion** | : | கிறிஸ்டியன் |
| **Village** | : | அரவக்குறிச்சி | **Calling** | : | இன்ஜினியர் (ஓய்வு) |
| **Taluk** | : | அரவக்குறிச்சி | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **31/07/2026.**

எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நான் பிறந்த ஊர் சிந்தலைச்சேரி. அரவக்குறிச்சி சென்று 36 வருடங்கள் ஆகிறது. எதிரி எனக்கு 30 வருடங்களுக்கு மேல் பழக்கம். எனது மனைவி ஆசிரியராக இருந்தார் என்றால் சரிதான். நானும் எதிரியும் சேர்ந்து கட்டுமான நிறுவன வேலை செய்து வந்தோம் என்றால் சரிதான். எதிரியுடன் சேர்ந்து கட்டிட வேலைகளுக்கு பொருள்கள் வாங்க செல்வேன் என்றால் சரியல்ல நான் அந்த நிறுவனத்தில் மேற்பார்வையாளராக மட்டுமே இருந்தேன். எதிரியின் கடைக்கு நான் சொல்வேனா என்றால் எப்பொழுதாவது சென்று வருவேன்.

3) எதிரிக்கு புகார்தாரர் எத்தனை மணிக்கு பணம் கொடுத்தார் என்றால் காலை 7 மணிக்கு கொடுத்தார். எதிரிக்கு காலை 7 மணிக்கு புகார்தாரர் பணம் கொடுக்கும் விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நானும் எதிரியும்தான் அரவக்குறிச்சியில் இருந்து வந்து பணத்தை வாங்கி சென்றோம். எதிரி என்னிடம் பணம் வாங்கி கொடுக்கச் சொன்னாரா நான் புகார்தாரரிடம் சொல்லி பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் கடன் கேட்டாரா

ஸ்ரீதரன் என்பவரிடம் கடன் கேட்டாரா என்றால் ஸ்ரீதரன் என்பவரிடம்தான் கடன் கேட்டார்.

4) எதிரி ஸ்ரீதரன் என்பவரிடம் நேரடியாக பணம் கேட்டாரா என்றால் அவர் எப்படி பேசிக் கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. கரூர் மாவட்டத்தில் பைனான்ஸ் நிறுவனங்கள் உள்ளபோது எதிரிக்கு எவ்வாறு ஸ்ரீதரன் என்பவரிடம் கடன் வாங்கி கொடுக்க தோன்றியது என்றால் கரூரில் அவருக்கு கடன் கொடுக்க ஆள் இல்லை. எதிரி கரூரில் தொழிலில் கெட்ட பெயர் வாங்கிவிட்டாரா என்றால் அது எனக்கு தெரியாது. எதிரியுடன் 30 ஆண்டுகளாக பழக்கத்தில் இருக்கிறேன் என்றும் அவரிடம் தொழில் ரீதியாக பழகி வருகிறேன் என்றும் அவர் எந்த விதத்தில் தொழில் செய்து வருகிறார் என தெரிந்திருந்தும் எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) பைனான்ஸ் நிறுவனங்கள் நிறைய உள்ள கரூர் மாவட்டத்திலேயே எதிரிக்கு பணம் கொடுக்க மறுத்தபோது நான் ஏன் ஸ்ரீதரன் என்பவரிடம் பணத்தை வாங்கி எதிரிக்கு கொடுத்தேன் என்றால் எதிரி என்னிடம் ஸ்ரீதரன் என்பவரிடம் பணம் கேட்டிருப்பதாகவும் பணம் வாங்கி கொடுங்கள் என்று என்னிடம் சொன்னதாலும் வாங்கி கொடுத்தேன். எதிரி கையொப்பம் மட்டும் செய்து வைத்திருந்த காசோலையை எடுத்து வந்து ஸ்ரீதரன் என்பவரிடம் கொடுத்து இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) ஸ்ரீதரன் என்பவரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு எவ்வளவு நாட்களில் திருப்பி தருவதாகச் சொன்னார் என்றால் மூன்று மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னார். கிறிஸ்தவ சபைகள் மூலமாக கிடைக்கும் கட்டிட வேலைகளை நான் எதிரியுடன் சேர்ந்து செய்து வந்தேன் என்றால் சரிதான். 2008 ஆம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரையிலும் 2015ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு

வரையிலும் சேர்ந்து தொழில் செய்து வந்தோம். 2020 ஆம் ஆண்டு நானும் எதிரியும் மனஸ்தாபத்தில் பிரிந்து கொண்டோம் என்றால் சரியல்ல வேலை இல்லை.

7) சபை மூலமாக வந்த வேலைகளில் நான் அதிகப்படியான லாபம் கேட்டதால் எதிரி என்னுடன் இருந்து பிரிந்துவிட்டார் என்றால் சரியல்ல. 15.6.2022 ஆம் தேதி எதிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தனது ஊர் மக்களுக்கு சாலை வசதி வேண்டுமென மனு கொடுக்கச் சென்று இருந்தார் என்றால் காலை 10 மணிக்கு அரவக்குறிச்சியில் எதிரியை இறக்கி விட்டு விட்டேன் அதன்பிறகு அவர் எங்கு சென்றார் என்று எனக்குத் தெரியாது. 15.6.2022 ஆம் தேதி எதிரி என்னுடன் வரவில்லை என்றும் இந்த ஊருக்கு அவர் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8) எனது மனைவியுடன் வேலை பார்த்த ஆசிரியர்களுக்கு பணம் வாங்கி கொடுத்து ஸ்ரீதர் என்பவர் மூலமாக காசோலை வழக்கு தாக்கல் செய்து அவர்களிடம் பணத்தை வசூல் செய்தேன் என்றால் சரியல்ல. ஸ்ரீதர் என்பவர் மூலமாக இரண்டு வழக்குகள் நான் தாக்கல் செய்தேன் என்றும் அது இந்த நீதிமன்றத்தில் நடந்தது என்றும் அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஜெராக்ஸ் கடை அரவக்குறிச்சி காவல் நிலையத்திற்கு எதிராக வைத்திருந்தேன் என்றால் பழைய காவல் நிலையத்திற்கு எதிராக வைத்திருந்தேன்.

9) அதனால் எனக்கும் காவல் நிலையத்திற்கும் நல்ல தொடர்பு உண்டு என்று சொன்னால் சரியல்ல. இந்த காசோலையை நான் திருடி சென்றதாக என்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தி காவல் நிலையத்திலேயே மேற்படி வழக்கை Mistake of

Fact என முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக ஸ்ரீதரன் என்பவரையும் விசாரித்தார்கள் என்றால் ஆய்வாளர் ஸ்ரீதரன் என்பவருக்கு அழைப்பாணை அனுப்பி இருந்தார் அவருக்கு காவல் நிலையம் தெரியாது என்னை அழைத்துச் செல்லும்படி கூறியிருந்தார் அதனால் அழைத்துச் சென்றிருந்தேன்.

10) ஸ்ரீதரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் உள்ளே வைத்து விசாரித்தார்கள் வாக்குமூலம் வாங்கினார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள கையொப்பத்தை தவிர மற்ற விபரங்கள் நான் எழுதினேன் என்றால் சரியல்ல. நான் இந்த காசோலையை திருடி சென்று நான் அதை நிரப்பிக் கொண்டு ஸ்ரீதர் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி தனது நடப்பு கணக்கிற்கு வைத்திருந்த காசோலை என்றும் மேற்படி நடப்பு கணக்கு 2017 ஆம் வருடத்திலேயே முடிக்கப்பட்டுவிட்டது என்றும் சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

11) இந்த வழக்கு காசோலையுடன் தொடர்புடைய மற்ற 49 காசோலைகளில் 7 காசோலைகளை தவிர மற்ற அனைத்து காசோலைகளும் பல்வேறு நபர்களுக்கு கொடுக்கப்பட்டு அதில் பணம் பெற்றுள்ளார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. பணம் பெறப்பட்ட காசோலை தவிர மற்ற காசோலைகள் குறித்து வங்கியிடம் கேட்டபோது மற்ற காசோலைகள் டெஸ்ட்ராய் செய்யப்பட்டதாக அறிக்கை கொடுத்துள்ளார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்கு இந்த காசோலையை வைத்து எனது நண்பர் மூலமாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M Digitally signed by NALLA KANNAN M Date: 2026.07.31 17:38:02 +0530

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**